மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தனியாகக் கடிதம் எழுதி விவரம் கேட்டுக் கொள்ளலாம்.

திருப்பத்தூரிலுள்ள அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி

* வினா எண் 118—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள அரசாங்க ஆதிதிராவிடர் மாணவிகள் விடுதியில் சேர்ந்து படிக்கும் மாணவிகளுக்கு கொடுக்கும் உணவைத் தவிர மற்ற பொருள் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) இதனுடைய விலை மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) ஆதிதிராவிடர் நலத்துறை நடத்தும் எல்லா மாணவியர் விடுதிகளுக்கும் அனுமதித்துள்ளபடி திருப்பத்தூர் ஆதிதிராவிட மாணவியர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவியர்களுக்கு இலவசமாக பாடபுத்தகம் நோட்டுப்புத்தகம் மற்றும் பலகைகள் அவர்கள் படிக்கும் வகுப்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. மேலும் வருடத்திற்கு இரு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. மேற்படி பொருள் மதிப்பு அவர்களின் வயது, படிக்கும் வகுப்பு அடிப்படையை பொறுத்ததாகும். எல்லா மாணவியருக்கும் மாதம் ஒரு ரூபாய் சலவைச் செலவாக அளிக்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவியர்களுக்கு அளிக்கப்படுகின்ற பலவிதமான சலுகைகள் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பாடப் புத்தகங்கள் எல்லாம் அவர்களுக்கு உரிய காலத்திற்குள் வழங்கப்படவில்லை என்கிற புகார் நீண்டநாட்களாக இருந்து வருகிறது அந்தக் குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதுபோன்று விடுதிகளில் உணவிற்காக கொடுக்கப்படுகின்ற தொகை கூட, விலைவாசிகள் எல்லாம் அதிகமாகியிருக்கின்ற காரணத்தால் போதவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அதை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: சென்ற ஆண்டைப் பொறுத்த வரை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த புத்தகங்கள் காலத் தாழ்வில் வழங்கப்பட்டது என்று ஒரு குறைபாடு சொல்லப் பட்டது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் 30-6-81—க்குள் வழங்கப்படவேண்டும் என்று அரசு கண்டித்து ஆணை பிறப்பித்

திருந்தது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அத்தகைய குறைகளை உறுப்பினர்கள் யாரும் இதுவரையில் என் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் அந்தக் குறை நீக்கப்பட்டிருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிற உணவுச் செலவு பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு ரூ. 45 என்று கொடுக்கப்பட்டு வந்ததை இந்த அரசு ரூ. 60 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன்: திருப்பத்தூரிலுள்ள ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியில் அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் அனுப்புகிற குறிப்புகளைப் பொருத்தும் அங்குள்ள தேவையைப் பொருத்தும் அரசு ஆவன செய்யும்.

திரு. இல. பலராமன்: இப்படிப்பட்ட விடுதிகளுக்கு அரசு வழங்கக்கூடிய பொருள்கள், பணங்கள் சரியாக விநியோகிக்கப் படவில்லை என்று கூறப்படுகிற பல புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்ததா? அமைச்சர் அவர்கள் சில விடுதிகளுக்குச் சென்று தவறுதலாக நடந்து கொண்ட ஒரு காப்பாளரை வேலைநீக்கம் செய்தார்களே, அது குறித்து மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: வேலை நீக்கம் செய்ய வில்லை. தாற்காலிக பதவி நீக்கம் செய்திருக்கிறோம், என்னைப் பொறுத்தவரையில் நான் செல்கிற இடங்களில் இது போன்ற குறைகள் எனக்குத் தெரிந்தால் திடீரென்று அந்த விடுதிக்குச் சென்று பார்வையிட்டு அத்தகைய குறைபாடுகளை நேரில் கண்காணித்து அவற்றைக் களையவேண்டும் என்ற எண்ணத்தால் இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறோம். பத்திரிகைகளில் இப்படிப்பட்ட செய்திகள் வருகிற போது அதைப் பார்த்தாவது மற்ற விடுதிக் காப்பாளர்கள் நல்லமுறையில் இனியாவது பணியாற்றுவார்கள் என்ற எண்ணத்துடனேயே நாம் இத்தகைய முயற்சிகளைச் செய்து வருகிறோம்.

திருமதி த. இராசாம்பாள்: ப்ளஸ் 2 படிக்கும் மாணவர்கள் முதல் ஆண்டு ப்ளஸ் 1 படித்துக்கொண்டிருந்தபோது கிடைத்து வந்த ஸ்காலர்ஷிப் இரண்டாவது ஆண்டு கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் அங்குள்ள தலைமை ஆசிரியர்கள் அதற்கான பாரங்களைப் பூர்த்தி செய்து புதுப்பித்து அனுப்பாததால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உதவித் தொகை பற்றி அடுத்த வினாவில் வருகிறது, அப்போது கேளுங்கள்,